[கலைஞர் மு. கருணாநிதி] [2006 ஆகஸ்ட் 30

புகார் கொடுத்தால், அதை வாங்கிப் பார்த்துவிட்டு, "இது மயிலாப்பூர் அல்ல: திருவல்லிக்கேணிக்குப் போ" என்று சொல்வார்கள். அது இல்லாமல்—வழக்குப் பதிவு செய்யத்தக்க குற்றம் நிகழ்ந்துள்ளதாகப் பொது மக்களிடமிருந்து புகார்கள் பெறப்படும்போது, நிலைய அதிகாரி முதல் தகவல் அறிக்கையை அங்கேயே பதிவு செய்து, தக்க, சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சம்பவம் தங்கள் எல்லையில் நடைபெறவில்லை என்ற காரணத்தைக் கூறி, புகார் மனுவினை ஏற்க மறுக்கக் கூடாது. பிற காவல் நிலைய எல்லைக்குள் குற்றம் நிகழ்ந்துள்ளதாகப் புகாரில் குறிப்பிடப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அந்த முதல் தகவல் அறிக்கை மாற்றம் செய்யப்படும். வழக்குப் பதிவு செய்ய அவசியமில்லாத புகார்கள் அளிக்கப்படும்போது, அவை விசாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தால் தீர்வு காணப்பட வேண்டும்.

தேர்தல் அறிக்கையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டுள்ள மூன்றாவது போலீஸ் கமிஷன் தலைவராக ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. ஆர். பூர்ணலிங்கம் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) போலீஸ் கமிஷன் துணைத் தலைவராக, சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர்களாக, ஓய்வுபெற்ற டி.ஜி.பி. திரு. பி. காளிமுத்து அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் ஓய்வுபெற்ற சிறைத் துறை டி.ஐ.ஜி. திரு. ஜி. இராமச்சந்திரன் அவர்களையும், உறுப்பினர்–செயலாளராக திரு. இராமானுஜம், ஐ.பி.எஸ். அவர்களையும் நியமிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–40

இன்னொரு முக்கிய அறிவிப்பு. வளர்ந்து வரும் சென்னை மாநகரத்தின் தேவைக்கேற்ப போக்குவரத்துப் பிரச்சினைகளைக் கையாளவும், சட்டம்–ஒழுங்கைப் பராமரிக்கவும், வளர்ந்த நாடுகளில் உள்ளதுபோல, சமீபத்திய உயர் தொழில்நுட்பச் சாதனங்களை, Latest Hi–tech Gadgets கொண்ட நடமாடும் கண்காணிப்புப் பிரிவுகளைக் காவல் துறையில் ஏற்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. அதையொட்டி, இருங்காட்டுக்கோட்டையில் உள்ள ஹுண்டாய் மோட்டார் நிறுவனம் நல்லெண்ண அடிப்படையில்—as a measure of goodwill—சென்னைப் பெருநகரக் காவல் துறையின் பயன்பாட்டுக்கென குளிர்சாதன வசதியுடன்கூடிய 100 Accent இரகக் கார்களை நன்கொடையாக வழங்க